**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திரு.G.வீராங்கன், கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 311/2017** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | முத்து | **வயது** | : | 54 |
| **த.பெ** | : | கன்னியப்பன் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | பெரணம்பாக்கம் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>16.04.2026 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1)பி.வா.சா.ஆ-4 ன் படி வாதி முனுசாமிக்கு கிரையம் கொடுத்ததாக நான் கூறுகிறேன், அப்படி யென்றால் முனுசாமியிடமிருந்து யார் தாவாசொத்தை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் பங்காரு என்ற லட்சுமி கிரையம் பெற்றுள்ளார். பங்காரு என்ற லட்சுமி என்பவரிடமிருந்து யார் கிரையம் பெற்றார் என்றால் உஷா என்பவர் கிரையம் பெற்றார். மேற்படி உஷா என்பவரிடமிருந்து தாவாசொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன். வாதி முனுசாமிக்கு கிரையம் கொடுத்த கிரையபத்திரத்தின் அசலை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி முனுசாமிக்கு கிரையம் கொடுத்ததாக நான் கூறுவது தவறு அப்படி எதாவது ஆவணம் ஏற்பட்டிருந்தால் அது போர்ஜரி ஆவணம் என்றால் சரியல்ல, வில்லங்க சான்றிதழில் காட்டப்பட்டுள்ளது.

2) வாதி யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை, அப்படி எதாவது ஆவணம் இருந்தால் அது நானும் மற்ற நபர்களும் தயாரிக்கபட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவாசொத்து பஞ்சமர் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்பதால் தான் என் பெயருக்கு வருவாய்துறை ஆவணங்கள் தாவாசொத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் நான் மனு தாக்கல் செய்திருந்தேன், ஆனால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யமுடியாது என்று கூறிவிட்டார்கள். மேற்படி நான் கூறும் விவரத்திற்கு எழுத்துபூர்வமான ஆதாரங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியாது, தாக்கல் செய்யவில்லை.

3)நான் கிரையம் பெற்றதாக கூறும் வருடம் 2003, ஆனால் இந்த வழக்கு 2004 ல் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், என்னை 2006 ல் தரப்பினராக இணைத்துள்ளார்கள். 2003 வருடத்திலிருந்து என்னை இந்த வழக்கில் 2006 ல் இணைத்தது வரை 3 ஆண்டுகாலமாக நான் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால்

**சரிதான். வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, நான் தாக்கல் செய்துள்ள கிரையபத்திரங்கள் செல்லாது, ஆகையால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.**

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.04.17 10:27:37 +0530

District Munsif,
Polur.